2023 ஏப்ரல் 12]

செழியன் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, எங்கெங்கெல்லாம் மரங்கள் இல்லாமல் இருக்கின்றனவோ, அங்கெங்கெல்லாம் நெடுஞ்சாலைத் துறை மூலமாக மரக் கன்றுகளை நட்டு, இந்த நாட்டை பசுமையாக ஆக்குவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

மஞ்சள் ஆராய்ச்சி மையம்

***1371—டாக்டர் சி. சரஸ்வதி:**

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, வடுகபட்டி பகுதியில் மஞ்சள் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி தொகுதி, வடுகபட்டி பகுதியில் மஞ்சள் ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எமது மொடக்குறிச்சி தொகுதியில் மஞ்சள் பயிரானது மிக அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது. கடந்த ஆட்சியில் மொடக்குறிச்சி தொகுதியில் மஞ்சள் ஆராய்ச்சி மையம் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டு, தனியாரின் ஆக்கிரமிப்பினால் அரசு நிலம் கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டு திட்டம் கைவிடப்பட்டது. தற்போது, அரசால், மொடக்குறிச்சி தொகுதி,*

வடுகபட்டி பகுதியில் வினோபா பூமிதான நிலம் அரசு நிலமாக மாற்றப்பட்டு, மஞ்சள் சிறப்பு மையம் அமைக்க அறிவிப்பு செய்து, நிலம் கையகப்படுத்தப்பட்டு, அடுத்த கட்டப் பணிகள் துவங்கும் நிலையில் உள்ளன. இந்த மஞ்சள் சிறப்பு மையம் அமைப்பதன் மூலமாக புதிய மஞ்சள் இரகங்களைக் கொண்டு வரவும், தற்போது மஞ்சளுக்கென உரிய விலை இல்லாததால், மஞ்சளின் உற்பத்திச் செலவினங்களைக் குறைக்க, மஞ்சள் பயிரிடுவது முதல் அறுவடை மற்றும் அறுவடைக்கு பின்நேர்த்திகள் வரை நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி, செலவினங்களைக் குறைத்து மகசூலை அதிகப்படுத்தவும், மஞ்சள் சிறப்பு மையம் விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்கும். எனவே, அரசு அதிகளவில் நிதியொதுக்கீடு செய்து, இங்கே மஞ்சள் சிறப்பு மையம் திறம்பட செயல்படவும், வருங்காலத்தில் விவசாயிகள் அதிகளவில் இலாபம் ஈட்டும் வகையில் மஞ்சளிலிருந்து பிரித்தெடுக்கப்படும் மருத்துவப் பண்புகள் நிறைந்த curcumin வேதிப் பொருளைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலை அமைத்தும், மஞ்சளின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யவும் வழிவகைகள் செய்து தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு பகுதியிலுள்ள விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடந்த 28–4–2022 அன்று சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டு, அதற்கு நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணியாளர்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பகுதி மஞ்சள் விவசாயிகள் பயிர் செய்வதற்கு புதிய இரகங்களைக் கண்டுபிடிப்பதற்கும், பழைய இரகங்களைப் பாதுகாத்து வைத்திருப்பதற்கும் அந்த ஆராய்ச்சி மையம் தற்போது பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால், மொடக்குறிச்சியில் மஞ்சள் ஆராய்ச்சி மையம் தேவையில்லை. கிட்டத்தட்ட 20,000 ஏக்கர் அளவிற்கு ஈரோடு பகுதி விவசாயிகள், மஞ்சள் விவசாயத்தை செய்து வருகின்றனர். அங்கே மஞ்சள் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு தற்போது வழிவகைகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 12]

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் சிறப்பு மையம் அமைப்பதற்கு ஏற்கெனவே நிலத்தைக் கையகப்படுத்தி, வேலைகளை ஆரம்பித்து விட்டார்கள். அதற்கு நீங்கள் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தால், அந்தப் பணிகள் வேகமாக நடைபெறும் என்று நினைக்கிறேன். மேலும், மஞ்சளை* pesticides *போட்டுதான் சேமித்து வைக்கிறார்கள். எனவே, மஞ்சளை சேமித்து வைப்பதற்குக் குளிர்பதனக் கிடங்கு அமைத்துக் கொடுத்தால், நமக்கு நச்சு இல்லாத மஞ்சள் கிடைக்கும். அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு, பெருந்துறை, கருமாண்டிசெல்லிபாளையத்தில் மஞ்சள் சந்தை வளாகம் 2015 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இங்குள்ள 9 விற்பனைக் குழுக்களின்கீழ் செயல்படும் 27 ஒழுங்குமுறை சந்தைகள்மூலம் 2022 ஆம் ஆண்டில் 433 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மஞ்சள் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று, ஒழுங்குமுறை விற்பனைக்கூடக் கிடங்குகளில் மஞ்சளை ஓராண்டுக் காலம் வரை பாதுகாப்பாகச் சேமிக்க வசதி உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சதாசிவம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

148—

சிப்காட் தொழிற்பூங்கா

***51030—திரு. S. சதாசிவம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—